# <u>தாரமங்கலம் நகர்மன்ற சாதாரண கூட்ட நாள்.30.08.2022ன் உண்மை நகல்</u>

2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30.08.2022ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு தாரமங்கலம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் நகராட்சி மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற தாரமங்கலம் நகர்மன்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகள்.

**முன்னிலை :–** **திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகராட்சி மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**

**தீர்மான எண்.176 (1)**

தாரமங்கலம் நகராட்சி பகுதிகளில் ஜீலை –2022 மாதத்தில் நிகழப்பெற்ற பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| ஜீலை 2022 | 0 | 1 | 1 | 15 | 13 | 28 | 0 | 0 | 0 |

**தீர்மான எண்.177 (2)**

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2022–2023ஆம் ஆண்டில் தாரமங்கலம் நகராட்சிக்கு தாரமங்கலம் கிராமம் புல எண்.182/2–ல் மொத்தம் விஸ்தீர்ணம் 3.78 ஏக்கர் பரப்பளவுள்ள நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை இடத்தில் புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.7628/2022/ MA1 நாள்.08.06.2022–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, நகராட்சி நிர்வாக முதன்மை பொறியாளர் அவர்களால் 15.06.2022 –ம் தேதியில் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 28.07.2022ஆம் தேதி கோரப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கௌதம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரருக்கு 05.08.2022 ஆம் தேதி அன்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு பெற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.ல | ஒப்பந்ததாரா் பெயர் | அதிகம் | ஒப்பந்ததாரா் பெயர் | குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சிக்கு சர்வே எண்.182/2–ல் புதிய அலுவலக கட்டிடம் கட்டுதல். | 350.00 | கோபால் எடப்பாடி | மதிப்பீட்டை விட 4.36% அதிகம் | கௌதம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் தாரமங்கலம் | மதிப்பீட்டை விட –0.13 % குறைவு |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.07/2022/அ1)

**தீர்மான எண்.178 (3)**

சட்டமன்ற அறிவிப்பு மற்றும் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் 2022–2023 ஆம் ஆண்டில் தாரமங்கலம் நகராட்சியில் ரூ.60.30 லட்சத்தில் நடைபெற்று வரும் 3 சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிகளுக்கு செப்டிக் டேங்க் மற்றும் தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தி தர மண்டல பொறியாளர் சேலம் அவர்களின் அறிவுறுத்தலின்படி கீழ்க்காணும் 3 சமுதாய கழிப்பிடங்களுக்கு செப்டிக் டேங்க் மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டர் பொருத்தி தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுத்திட ஆகும் செலவினம் ரூ.10,85,000/–னை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.ல |
|---|---|---|
| 1. | 1வது வார்டு நரிக்குறவர் காலனி பகுதியில் புதியதாக கட்டப்படும் சமுதாய கழிப்பிடத்திற்கு செப்டிக் டேங்க் மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டர் பொருத்தி தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுத்தல். | 4.75 |
| 2. | 3வது வார்டு பாரக்கல்லூர் பகுதியில் புதியதாக கட்டப்படும் சமுதாய கழிப்பிடத்திற்கு செப்டிக் டேங்க் மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டர் பொருத்தி தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுத்தல். | 4.75 |
| 3. | 13வது வார்டு நல்லகிணறு தெரு பகுதியில் புதியதாக கட்டப்படும் சமுதாய கழிப்பிடத்திற்கு செப்டிக் டேங்க் அமைத்தல். | 1.35 |
| | **மொத்தம்** | **10.85** |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.357/2022/அ1)
2. மேற்கண்ட செலவுத்தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.179 (4)**

தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் தாரமங்கலம் நகராட்சியில் ரூ.96.10 லட்சத்தில் சர்வே எண்.244/3–ல் உள்ள சுமார்.13785$M^3$ தேங்கி உள்ள குப்பைகளை நுண்ணுயிரி செயலாக்க முறையில் அகற்றும் பணி செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.9512/2022/SBM-1 நாள்.20.06.2022–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது, தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாகம் சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடித ந.க.எண்.001/2022/DO1 நாள்.15.07.2022–ல் வழங்கப்பட்டது. அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டது, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 22.08.2022 ஆம் தேதி கோரப்பட்டதில் மதிப்பீட்டு தொகையை விட 0.14 சதவீதம் குறைவாக கோரிய New age Environment solutions PVT Ltd., Chennai 600004 என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.950/2021/அ1)

**தீர்மான எண். 180 (5)**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2022–2023ன் கீழ் தாரமங்கலம் நகராட்சியில் ரூ.140.92 லட்சம் மதிப்பீட்டில் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13–ல் புல எண்.358/3–ல் புதிய நவீன நூலகம் மற்றும் அறிவுசார் மையம் பணி செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8879/2022/பி1 நாள்.21.06.2022–ன் படி நிர்வாக அனுமதி வழங்கியும் மேலும் தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.001/2022/டி01 நாள்.27.06.2022–ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டது, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 15.07.2022 ஆம் தேதி கோரப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கலை கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரருக்கு 18.07.2022 ஆம் தேதி அன்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு பெற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.ல | ஒப்பந்ததாரர் பெயர் | அதிகம் | ஒப்பந்ததாரர் பெயர் | குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.13–ல் புல எண். 358/3–ல் நத்தம் காலியிட வகைப்பாடு இடத்தில் புதிய நவீன நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைத்தல். | 140.92 | கௌதம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | மதிப்பீட்டை 4.27% அதிகம் | கலை கன்ஸ்ட்ரக் சன்ஸ் | மதிப்பீட்டை –0.14 % குறைவு |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.250/2022/அ1)

**தீர்மான எண். 181 (6)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 20வது வார்டு கிழக்குபாவடி கிழக்கு பகுதியில் சர்வே எண்.159/7–ல் நுண் உயிர் உர மையம் –1 எண்ணிக்கை 3 மெட்ரிக் டன் எடை ரூ.34.50 லட்சம் மதிப்பீட்டில் (Central Govt Share 17.25Lakhs) மற்றும் (State Govt Share 11.385 Lakhs) மற்றும் நகராட்சியின் பங்கு தொகை ரூ.5.865 லட்சம் என தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) திட்டத்தில் பணிகள் மேற்கொள்ள நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி 01.08.2022 ஆம் தேதியில் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 18.08.2022 ஆம் தேதி அன்று நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வேண்டி மண்டல பொறியாளர் நகராட்சி நிர்வாகம் சேலம் அவர்களுக்கு அனுப்பி 23.08.2022 அன்று ஒப்புதல் பெறப்பட்டது, மேற்காணும் பணிக்கு 09.09.2022 ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி அறிவிப்பு வெளியிட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு பெற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.552/2022/அ1)

**தீர்மான எண். 182 (7)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 20வது வார்டு கிழக்குபாவடி மேற்கு பகுதியில் சர்வே எண்.159/7–ல் நுண் உயிர் உர மையம் –1 எண்ணிக்கை 3 மெட்ரிக் டன் எடை ரூ.34.50 லட்சம் மதிப்பீட்டில் (Central Govt Share 17.25Lakhs) மற்றும் (State Govt Share 11.385 Lakhs) மற்றும் நகராட்சியின் பங்கு தொகை ரூ.5.865 லட்சம் என தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) திட்டத்தில் பணிகள் மேற்கொள்ள நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி 01.08.2022 ஆம் தேதியில் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 18.08.2022 ஆம் தேதி அன்று நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வேண்டி மண்டல பொறியாளர் நகராட்சி நிர்வாகம் சேலம் அவர்களுக்கு அனுப்பி 23.08.2022 அன்று ஒப்புதல் பெறப்பட்டது, மேற்காணும் பணிக்கு 09.09.2022 ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி அறிவிப்பு வெளியிட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு பெற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.552/2022/அ1)

**தீர்மான எண். 183 (8)**

அரசாணை எண்.Ms.103, நிதித்துறை நாள்.11.04.2022–ன் படி, தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் உள்ள சாலையோர வியாபாரிகள் குறித்து கணக்கெடுத்தல், அடையாள அட்டை வழங்குதல் மற்றும் வங்கி கடன் வழங்குதல் போன்ற பணிகள் செய்வதற்கு, மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு 15.07.2022 ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Sense Images என்ற நிறுவனத்திற்கு 19.07.2022 ஆம் தேதி அன்று பணிகள் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு வழங்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.ல | ஒப்பந்ததாரர் பெயர் | அதிகம் | ஒப்பந்ததாரர் பெயர் | குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் உள்ள சாலையோர வியாபாரிகள் குறித்து கணக்கெடுத்தல், அடையாள அட்டை வழங்குதல் மற்றும் வங்கி கடன் வழங்குதல் | 1.00 | SENSE IMAGE PVT LTD | 700 | WHIEOX PVT LTD | 900 |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.993/2020/அ1)

**தீர்மான எண்.184 (9)**

15வது மத்திய நிதிக்குழு – (Un Tied Grant) திட்டத்தின் கீழ் தாரமங்கலம் நகராட்சியில் ரூ.39.20 லட்சத்தில் தாரமங்கலம் நகராட்சியில் தெற்கு ரத வீதியில் 80 மீட்டர் மேற்கு ரத வீதியில் 230 மீட்டர் என மொத்தம் 310 மீட்டர் நீளத்திற்கும் 9 மீட்டர் அகலத்திற்கும் ஜலகண்டாபுரம் சாலையில் 60 மீட்டர் நீளம் 5 மீட்டர் அகலத்திற்கும் தார்சாலை அமைக்கும் பணி செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.31114/2021/CFC நாள்.20.06.2022–ன்படி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி கடித ந.க.எண்.2687/2022/பி1 நாள்.27.06.2022, நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், சேலம் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடித ந.க.எண்.2687/2022/பி1 நாள்.27.06.2022–ல் பெறப்பட்டது. அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டது, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 28.07.2022ஆம் தேதி கோரப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கலை கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்திற்கு 05.08.2022 ஆம் தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் பணிக்கு மன்றத்தின் பின்னேற்பு பெற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.ல | ஒப்பந்ததாரர் பெயர் | அதிகம் | ஒப்பந்ததாரர் பெயர் | குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட தெற்கு ரத வீதியில் 80 மீட்டர் மேற்கு ரத வீதியில் 230 மீட்டர் என மொத்தம் 310 மீட்டர் நீளத்திற்கும் 9 மீட்டர் அகலத்திற்கும் ஜலகண்டாபுரம் சாலையில் 60 மீட்டர் நீளம் 5 மீட்டர்அகலத்திற்கும் தார்சாலை அமைக்கும் பணி. | 39.20 | ஸ்ரீ ராகவேந்திரா | மதிப்பீட்டை 2.73% அதிகம் | கலை கன்ஸ்ட்ரக் சன்ஸ் | மதிப்பீட்டை –0.16 % குறைவு |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.384/2022/அ1)

**தீர்மான எண். 185 (10)**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021–22 ஆம் ஆண்டு சங்ககிரி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு.எ.சுந்தர்ராஜன், அவர்களால் பரிந்துரைக்கப்பட்டு, திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சேலம் அவர்களின் கடித ந.க.எண்.1256/2022/அ2 நாள்.28.07.2022–ன்படி சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்கு கீழ்க்காணும் 6 பணிகள் தேர்வு செய்யப்பட்டும் மற்றும் திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சேலம் அவர்களின் கடித ந.க.எண்.1256/2022/அ2 நாள்.02.08.2022–ன்படி 1 பணிகள் தேர்வு செய்யப்பட்டும் மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | சாத்தியக்கூறு |
|---|---|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சி பழைய HP Gas அலுவலகம் பின்புறம் ஜெகநாதன் வீடு அருகில் புதிய ஆழ்துளைக்கிணறு அமைத்து நான்கு வீதிகளுக்கு பைப் லைன் அமைக்கும் பணி | 5.00 | இடம் பார்வையிடப் பட்டது. ஒதுக்கீடு தொகையை விட உத்தேச மதிப்பீடு தொகை அதிகமாக உள்ளது. |
| 2. | தாரமங்கலம் நகராட்சி ரகுபதி குடியிருப்பு பகுதி, சாந்தி வீடு அருகில் புதிய ஆழ்துளைக்கிணறு அமைத்து மூன்று வீதிகளுக்கு பைப் லைன் அமைக்கும் பணி | 5.00 | |
| 3. | தாரமங்கலம் நகராட்சி பெத்தான் நஞ்சப்ப முதலி தெருவில் உள்ள நவீன கழிப்பிடம் அருகில் 42 மீட்டர் நீளம், 2 மீட்டர் அகலம் சாக்கடை வசதி அமைக்கும் பணி | 2.00 | |
| 4. | எம்.ஜி.ஆர்.காலனி செல்லும் வழியில் துரைசாமி வீடு அருகில் இருந்து மறுபக்கம் வரை நடுவே 10 மீட்டர் நீளம், 2 மீட்டர் அகலம் சாக்கடை வசதி அமைக்கும் பணி | 1.00 | |
| 5. | தாரமங்கலம் நகராட்சி 17வது வார்டு புது தெரு லைன் 9–ல் எஸ்.பி.கோவிந்தராஜீ வீடு முதல் கோபால் வீடு சிறுபாலம் வரை 250 மீட்டர் நீளம் சாக்கடை வடிகால் வசதி அமைக்கும் பணி | 7.50 | |
| 6. | தாரமங்கலம் நகராட்சி 20–வது வார்டு புலவன் சந்து குருத்து பெரியசாமி வீடு முதல் துணை சுகாதார நிலையம் வரை 100 மீட்டர் நீளம் தார்சாலை அமைக்கும் பணி | 6.50 | |
| | மொத்தம் | 27.00 | |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | சாத்தியக்கூறு |
|---|---|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சி 14வது வார்டு தாரமங்கலம் முதல் ஜலகண்டாபுரம் செல்லும் வழியில் உள்ள நடுநிலைப்பள்ளி வளாகத்தில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் அமைக்கும் பணி. | 11.78 | இடம் பார்வையிடப்பட்டது. பணி மேற்கொள்ளும் இடமானது தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமானதாகும் |

**அலுவலக குறிப்பு :** மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.548/2022/அ1)

**தீர்மான எண். 186 (11)**

தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் 2022–2023 ஆம் ஆண்டில் தாரமங்கலம் நகராட்சியில் கீழ்க்காணும் 3 பணிகளை தலா ரூ.20.10 லட்சம் என மொத்தம் ரூ.60.30 லட்சத்தில் மேற்கொள்ள இவ்வலுவலக ந.க.எண்.357/2022/அ1 நாள்.13.06.2022–ன்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில், 30.06.2022–ன் படி வரப்பெற்ற கீழ்க்காணும் ஒவ்வொரு பணிக்கும் இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து, ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது அதில் கீழ்காணும் விவரப்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி துவங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு பெற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.ல | ஒப்பந்ததாரர் பெயர் | அதிகம் | ஒப்பந்ததாரர் பெயர் | குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1. | 1வது வார்டு நரிக்குறவர் காலனி பகுதியில் 1 சமுதாய கழிப்பிடம் கட்டுதல். | 20.10 | கலை கன்ஸ்ட்ரக் சன்ஸ் | மதிப்பீட்டை 2.15% அதிகம் | கௌதம் கன்ஸ்ட்ரக் சன்ஸ் | மதிப்பீட்டை –0.15 % குறைவு |
| 2. | 3வது வார்டு பாரக்கல்லூர் பகுதியில் 1 சமுதாய கழிப்பிடம் கட்டுதல். | 20.10 | எஸ்.மாரியப்பன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை 2.00% அதிகம் | எ.சண்முகம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை –0.14 % குறைவு |
| 3. | 13வது வார்டு நல்லகிணறு தெரு பகுதியில் 1 சமுதாய கழிப்பிடம் கட்டுதல். | 20.10 | கௌதம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | மதிப்பீட்டை 1.25% அதிகம் | கலை கன்ஸ்ட்ரக் சன்ஸ் | மதிப்பீட்டை –0.10 % குறைவு |

**அலுவலக குறிப்பு :**

1. வரிசை எண்.3–ல் காணும் 13வது வார்டு நல்லகிணறு தெரு பகுதியில் ஏற்கனவே உள்ள பொது கழிப்பிடமானது தற்போது இடிந்த விழும் நிலையில் உள்ளதாக இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரின் 07.06.2022ஆம் தேதியில் தல ஆய்வு செய்யப்பட்டு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.13வது வார்டு நல்லகிணறு தெரு பொதுக்கழிப்பிடத்தின் தரம் ஆய்வு செய்வது குறித்து 08.06.2022ஆம் தேதியில் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி கழிப்பிடத்தின் தரம் குறித்து சான்று வழங்க வேண்டி முதல்வர், தர்மபுரி, அரசு பொறியியல் கல்லூரிருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதில், மேற்படி 13வது வார்டு நல்லகிணறு தெரு பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடம் பயன்பாட்டிற்கு உகந்ததல்ல என்பதற்கான விபரங்களின் அடிப்படையில் இக்கட்டிடத்தினை இடிக்கலாம் என தெரிவித்து ,12.08.2022 ஆம் தேதி அன்று சான்று வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ளலாம்.

2. வரிசை எண்.1 ,2 மற்றும் 3வதாக மேற்கொள்ளும் பணியினை மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.357/2022/அ1).

**தீர்மான எண். 187 (12)**

தாரமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சியானது அரசாணை நிலை எண்.117 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.07.12.2021–ன் படி தரம் உயர்த்தப்பட்டு நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தாரமங்கலம் நகராட்சியின் மக்கள் தொகை 30222 ஆகும். 27 வார்டுகளை கொண்டு, இப்பகுதிகளில் மொத்த குடியிருப்புகள் 8834 மற்றும் 163 தெருக்களை கொண்டுள்ளது. மேலும் வளர்ந்து வரும் நகராட்சியாக உள்ளது. இந்நகராட்சியில் பொதுப்பணி மற்றும் திட்டப்பணிகள் மேற்கொள்ள பொறியியல் பிரிவில் நிரந்தரமான பணியாளர்கள் எவரும் இல்லை.

மேற்படி பொறியியல் பிரிவு பணிகளை இடைப்பாடி நகராட்சியின் உதவிப்பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் இந்நகராட்சிகளின் திட்டபணிகள் கூடுதல் பொறுப்புடன் கவனித்து வருகின்றனர்.இந்நகராட்சிக்கு உட்பட்ட மக்களுக்கு அவசர அவசியத்தினை கருதி எந்த ஒரு திட்டப்பணிகளும் அரசு மற்றும் பொது நிதியின் கீழ் செயல்படுத்த நிரந்தரமாக பொறியியல் பணியாளர்கள் இல்லாத நிலையிலும் மேலும் மேற்படி மாற்றுப்பணியில் பணிபுரியும் உதவிப்பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் வாரம் ஒறிருமுறைகள் மட்டும் வந்து செல்வதால் திட்டப்பணிகள் விரைவாக செயல்படுத்த முடியாத நிலை உள்ளது.

தற்போது மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதிய விகிதப்படி, நகர் மன்றத்தின் அனுமதி பெற்று பொறியியல் பிரிவில் ஒரு தற்காலிக தொழில்நுட்ப உதவியாளராக திரு.த.பாலாஜி என்பவர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார். மேற்படி தொழில்நுட்ப உதவியாளரும் அடிக்கடி திட்டப்பணிகளுக்கான முன்மொழிவுகள் எடுத்துக்கொண்டு சென்னை அலுவலகத்திற்கும், சேலம் அலுவலகத்திற்கும் சென்று வருவதால், இந்நகராட்சியில் திட்டப்பணிகள் தொடர்பான பணிகளில் சுணக்க நிலை ஏற்படுவதை தவிர்க்க டிப்ளமோ (சிவில்) முடித்தவரை கூடுதலாக தொழில்நுட்ப உதவியாளராக தற்காலிகமாக 01.08.2022 முதல் 31.12.2022 முடிய 4 மாதங்களுக்கு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயம் செய்த ஊதிய விகிதப்படி அமர்த்தி பணி பார்க்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.188 (13)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் சேகரிக்கப்படும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை சங்ககிரி மெயின் ரோட்டில் உள்ள மயானத்தில் கொட்டி வைத்துள்ளார்கள் எனவும், அதனை அப்புறப்படுத்த வேண்டும் என திரு.சாமிநாதன் வழக்கறிஞர் என்பவரால் தொடுக்கப்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழக்கு எண்.O.S.No.220/2015 IA தற்போது தகன எரிமேடை அமைக்க கூடாது என்றும் மேற்படி வழக்கறிஞரால் மாவட்ட உரிமையியல் நீதி மன்ற IA No.1/2022 யை வழக்கு தொடர்ந்தமைக்கும் மற்றும் O.S.No.211/2015, மேலும் சட்டக்கருத்துரு வழங்கியமைக்கு திரு.எம்.கண்ணன் அரசு வழக்கறிஞர் ஓமலூர் என்பவருக்கு ரூ.22000/– காசோலை வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.950/2021/அ1)

**தீர்மான எண். 189 (14)**

தாரமங்கலம் நகராட்சியில் புதிய எரிவாயு தகனமேடை அமைக்க அரசாணை (நிலை) எண்.15 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.01.2022–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்ய வேண்டி உள்ளது. மேலும் தாரமங்கலம் நகராட்சி பேரூராட்சியாக இருந்து அரசாணை (நிலை) எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.07.12.2021–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு பொறியாளர் , பணி மேற்பார்வையாளர், பணி ஆய்வர் மற்றும் பொறியியல் பிரிவு பொறியாளர்கள் யாரும் இதுவரை நிரப்படாமல் உள்ளது. தற்போது அருகில் உள்ள நகராட்சியில் இருந்து கூடுதல் பொறுப்பில் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரால் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனால் விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்வதில் கால தாமதம் ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட புதிய எரிவாயு தகனமேடை அமைப்பதற்கு விரிவாக திட்ட மதிப்பீடு வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கு உதவியாக Smart Builders, Palladam Road, Tiruppur- 641604 நியமித்து பணி மேற்கொண்டமைக்கான , உத்தேச செலவு தொகை ரூ.195000/– பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தினை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண் . 190 (15)**

தாரமங்கலம் நகராட்சியில் 2022–2023 ஆம் ஆண்டு (01.08.2022 முதல் 31.07.2023 முடிய) உள்ள காலத்திற்கு நகராட்சியின் அலுவலக கணினியை இயக்குவதற்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.520/2021/அ1 நாள்.11.07.2022–ன் படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு 2707.2022ஆம் தேதி கீழ்க்கண்டுள்ள பட்டியலில் தெரிவித்துள்ளபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்றுகொண்டு திருமதி.செ.கார்த்திகா என்பவருக்கு பணி உத்திரவு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மாதம் ஒன்றுக்கு தொகை ரூ. | ஒப்பந்த பணியாளர் பெயர் | |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சியின் அலுவலக கணினியை இயக்குதல். | 19050/– | திருமதி.செ.கார்த்திகா | குறைவு |
| | | 19500/– | திரு.ச.யுவராஜ் | அதிகம் |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.520/2022/அ1)

**தீர்மான எண். 191 (16)**

துணை இயக்குநர், சுகாதார பணிகள் சேலம் அவர்களின் அலுவலக ந.க.எண்.199/இ5/2020, நாள்.04.05.2022–ன் கடிதத்தில் தற்போது 2022ஆம் வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து விட்டு விட்டு மழை பெய்து வருகின்றது. இதனை தொடர்ந்து, தென் மேற்கு பருவமழை ஆரம்பிக்கும் , ஜீன் மாதத்திலிருந்து டெங்கு கொசுப்பழு வளர் நிலைகள் அதிகரித்து டெங்கு காய்ச்சல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆகையால் டெங்கு காய்ச்சல் பரவாமலும், அதிகரிக்காமலும் தடுப்பதற்கு டெங்கு கொசுப்புழு அடர்த்தியை டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி செய்து குறைக்க 05/2022 முதல் 07/2022 வரை மன்ற தீர்மானத்தில் பொருள் வைக்கப்பட்டு, 20 டெங்கு மஸ்தூர் பணியாளர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். ஆனால் தற்போது பணி செய்யும் காலம் 31.07.2022 அன்று முடிவடைவதால், 01.08.2022 முதல் 31.10.2022 வரை உள்ள காலத்திற்கு தற்காலிகமாக 20 டெங்கு மஸ்தூர் பணியாளர்களை பணி செய்திட நாள் ஒன்றுக்கு ரூ.250/– பழைய ஊதிய விகிதத்தில் பணி தொடர்ந்து செய்திடவும் மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தினை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.192 (17)**

தாரமங்கலம் நகராட்சி 27 வார்டுகளை கொண்ட இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 30222 ஆகும், தற்போதைய மக்கள் தொகை 32035 ஆகும். இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 9.72 சதுர கிலோமீட்டர் கொண்டதாகும். இந்நகராட்சியில் 8833 குடியிருப்புகளும், 492 வார்த்தக நிறுவனங்களும் உள்ளது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு 8.700 மெட்ரிக் டன் அளவு திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை சேகரித்து முதன்மை சேகரிப்பு பணி மற்றும் முறைப்படி நுண் உரம் தயாரித்தல் பணி நடைபெற்று வருகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/ 2021/EA2. நாள்.02.10.2021 வெளியிட்டுள்ள அளவுகோல்படி இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் சிறப்பாக செயல்படுத்திட தற்போது பணியிலுள்ள துப்புரவு ஆய்வாளர்–1, துப்புரவு பணி மேற்பார்வையாளர்–2, தூய்மை பணியாளர்கள் –36, ஓட்டுநர்–1, ஆகியோர் உள்ளனர். திடக்கழிவு பணியாளர்கள் –58, மற்றும் 2 வாகன ஓட்டுநர்கள் இந்திரா மரகதம் மகளிர் சுய உதவிக்குழுவிற்கான பணி காலம் 31.07.2022 அன்றுடன் முடிவடைவதால், மேலும் மூன்று மாதங்களுக்கு 01.08.2022 முதல் 31.10.2022 வரை ஒப்பந்த அடிப்படையில் பணி செய்திட, இதற்கான செலவினத்னை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தினை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.193 (18)**

2022–2023 ஆம் ஆண்டிற்கான (01.07.2022 முதல் 30.09.2022வரை) உள்ள மாதங்களுக்கு பொது சுகாதார பொருட்களான பிளீச்சிங் பவுடர்(குடிநீர்), பிளீச்சிங் பவுடர்(பொது சுகாதாரம்), சுண்ணாம்புத்தூள் கருப்பு பினாயில், போக்கிங் கேஸ் (Fogging Gas) Hydrochloric Acid லைசால் மற்றும் தளவாட சாமான்கள் ஒப்பந்தப்புள்ளி மூலம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளுக்கும் பொது சுகாதார பயன்பாட்டிற்கு சுகாதார பொருட்கள் சப்ளை செய்வதற்கு இவ்வலுவலக ந.க.எண்.10/2022/அ1 நாள்.28.06.2022–ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஸ்ரீ விநாயகா டிரேடர்ஸ், ஜெ.கே.கெமிக்கல்ஸ் , கே.ஆர்.ஜி. எண்டர்பிரைசஸ், திலகம் எண்டர்பிரைசஸ் ஆகிய 4 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ விநாயகா டிரேடர்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்குவதற்கு (01.07.2022 முதல் 30.09.2022 வரை) உத்தேச செலவினம் ரூ.9,00,000/– இலட்சத்திற்கு நகராட்சியின் பொதுநிதியில் கொள்முதல் செய்வதற்கு நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டதற்கு நகராட்சி மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.11/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.194 (19)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் கீழ்க்கண்ட விவரப்படி, தெருவிளக்குகள் அமைந்துள்ளன.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டியூப் லைட்டுகள் | 894 |
| 2 | எஸ்.வி. லேம்ப் | 99 |
| 3 | CFL | 50 |
| 4 | High -Mass Light | 1 |
| 5 | LED Light | 192 |
| 6 | மற்றவை | 8 |
| | மொத்தம் | 1294 |

2022–2023 ஆம் ஆண்டிற்கான (01.07.2022 முதல் 30.09.2022வரை) உள்ள மாதங்களுக்கு தெருமின்விளக்கு உபகரணங்கள் கோடை காலம் மற்றும் மழை காலத்தினால் பழுதடையும் போது அதற்கு தேவையான உபகரணங்கள் ஒப்பந்தப்புள்ளி மூலம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளுக்கும் பொது சுகாதார பயன்பாட்டிற்கு சுகாதார பொருட்கள் சப்ளை செய்வதற்கு இவ்வலுவலக ந.க.எண்.08/2022/அ1 நாள்.08.06.2022–ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஸ்ரீ ராம் எலட்ரிகல்ஸ், விபி.கே.ஏஜென்சீஸ், ஸ்ரீ பார்வதி அசோசியேட்ஸ் ஆகிய 3 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ ராம் எலட்ரிகல்ஸ், என்ற நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்குவதற்கு (01.07.2022 முதல் 30.09.2022 வரை) உத்தேச செலவினம் ரூ.9,50,000/– இலட்சத்திற்கு நகராட்சியின் பொதுநிதியில் கொள்முதல் செய்வதற்கு நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டதற்கு நகராட்சி மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.08/2022/அ1)
2. மேற்கண்ட செலவுத்தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் .195 (20)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு எண்.20,21,27 மற்றும் 10 ஆகிய வார்டுகளில் குடிநீர் பற்றாக்குறையினால், பொது மக்கள் சிரமப்படுகிறார்கள் என மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.12418/2021 திரு.சக்திவேல் என்பவர் அனுப்பிய மின்னஞ்சல் புகார் குறித்து தல அறிக்கையினை 06.06.2022 நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது. எனவே அவசர அவசியம் கருதி வார்டு எண்.20, 21, 27 மற்றும் 10 ஆகிய வார்டுகளில் குடிநீர் பைப் லைன் விஸ்தரிப்பு செய்து பொது மக்களுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, பைப் லைன் விஸ்தரிப்பு செய்யும் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இந்நகராட்சியில் பதிவு செய்யப்பட்டுள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி மேற்கொள்ளவும் இப்பணிக்கான செலவினம் ரூ.780000/–யை பொதுநிதியில் மேற்கொள்ள நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி மற்றும் உத்தரவு பெறப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொண்ட திரு.எம்.பழனிசாமி ஒப்பந்ததாரருக்கு, இந்நகராட்சியின் பொது நிதியில் இருந்து தொகை ரூ.780000/–லிருந்து, பிடித்தங்கள் போக மீதி தொகை ரூ.686619/–யை காசோலையாக வழங்குவதற்கு நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி வாங்கியமைக்கு பின்னேற்பு வழங்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.119/2021/அ1)

**தீர்மான எண் . 196 (21)**

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 12வது வார்டில் அமைந்தள்ள அருள்மிகு கைலாசநாதர் கோவில் செயல் அலுவலரின் கடிதத்திற்கிணங்க, அருள்மிகு கைலாசநாதர் கோவில் எதிர்ப்புறமுள்ள பஜனைமடம் அருகில் உள்ள சிமெண்ட் சாலையானது மிகவும் பழுதடைந்து மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாலும், மேலும் அருள்மிகு சிவகாமசுந்தரி உடனுறை கைலாசநாதர் கோவில் கும்பாவிஷேக 4ஆம் ஆண்டு நிறைவு விழா சப்பரம் வீதி உலா வருவதற்கும் மேற்படி பழுதடைந்த சிமெண்ட் சாலையை பராமரிப்பு பணி செய்ய வேண்டிய அவசர அவசியம் கருதி தாரமங்கலம் நகராட்சி பொது நிதியில் 100 மீட்டர் சிமெண்ட் சாலையை பராமரிப்பு மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ரூ.1.75 லட்சம் மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி செய்து பொதுநிதியிலிருந்து தொகை வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.17/2022/அ1)

**தீர்மான எண் .197 (22)**

இணை இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை சென்னை அவர்களின் கடித ந.க.எண்.30584/2014/Ea2 நாள்.11.08.2022–ன்படி வரப்பெற்ற கடிதத்தில் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் உள்ள சீமைக்கருவேல மரங்களை முழுமையாக அகற்ற தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி மரங்களை அகற்ற தாரமங்கலம் நகராட்சியின் பொது நிதியில் ரூ.3.00/– லட்சம் மதிப்பீட்டில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் . 198 (23)**

தாரமங்கலம் நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் ஒவ்வொரு மாதமும் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். ஆனால் மன்ற அரங்கம், மைக் செட், பேன் மற்றும் ஜெனரேட்டர் ஆகியவை இல்லாததால் 30.03.2022 ஆம் தேதி முதல் 28.06.2022ஆம் தேதி வரை நடந்த மன்ற கூட்டத்திற்கு மைக்செட், பேன் மற்றும் ஜெனரேட்டர் பயன்படுத்தியமைக்கு ஜீவா சவுண்ட் சிஸ்டம், தாரமங்கலம் உரிமையாளர் திரு.எம்.வெங்கடேஸ் என்பவரிடமிருந்து பட்டியலில் தொகை ரூ12400/– மற்றும் ரூ.4200/– ஆக மொத்தம் ரூ.16600/–யை நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் .199 (24)**

தாரமங்கலம் நகராட்சியின் பேருந்து நிலைய வளாகத்தில் பொது மக்கள் பயன்படுத்த குடிநீர் மேல்நிலை தொட்டி சின்டெக்ஸ் டேங்க் முறையாக பராமரிப்பு இன்றி பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்த 1000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் பைப் லைன் மற்றும் சிமெண்ட் சாலை ஆகியன அமைத்து வடிகால் நீர் வெளியேற chamber ஆகிய பணிகள் செய்ய மதிப்பீடு தயாரிக்கும்படி தெரிவிக்கப்பட்டது. அதன்படி மதிப்பீடு தயாரிக்க உள்ளூர் ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளி கோரி மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அதன்படி ஆகும் உத்சே செலவினம் ரூ.22,000/—க்கு உரிய அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரவும், நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதியில் தொகை வழங்கியமைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் .200 (25)**

தாரமங்கலம் நகராட்சியின் 1 முதல் 27 வார்டுகளிலும் உள்ள பொதுக்கழிப்பிடங்களில் அமைந்துள்ள கழிவுநீர்தொட்டியில் உள்ள கழிவுநீர் நிறைந்துள்ளதை சுத்தம் செய்தமைக்கு நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதியில் தொகை ரூ.40000/— வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் .201 (26)**

தாரமங்கலம் நகராட்சியின் 11.03.2022 முதல் 18.06.2022 வரை நடந்த அலுவலகத்திற்கு தேவைப்படும் அனைத்து நிகழ்வுகளையும் புகைப்படம் மற்றும் போட்டோ வாயிலாக பதிவு செய்தமைக்கு சன் டிஜிட்டல் ஸ்டுடியோ நிறுவனத்திற்கு நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தாரமங்கலம் நகராட்சியின் பொதுநிதியில் தொகை ரூ.77800/—வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.202 (27)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் உள்ள மின் கம்பங்களில் பழுதான சோடியம், குழல்விளக்கு, சி.எப்.எல் ஆகிய விளக்குகளை கழற்றி மாற்றி கொடுத்தமைக்கு 01.09.2021 முதல் 31.07.2022 முடிய உள்ள மாதங்களில் பணி செய்து கொடுத்தமைக்கு ஒரு விளக்கிற்கு ரூ.25/– வீதம் மொத்தம் 1200 விளக்குகள் மாற்றியமைக்கு தொகை ரூ.30000/– நகராட்சியின் பொதுநிதியில் வழங்க வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவுத்தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.203 (28)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் அவசர அவசியம் கருதி கீழ்க்காணும் பணியினை பொதுநிதி – 2022–2023–ன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 16.08.2022 ஆம் தேதி கோரப்பட்டதில் அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கவும் மேலும் கீழ்க்காணும் பணிகளுக்கான செலவினத்தினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்கவும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (இ) | டேவணி தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி படிவ விலை | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 4வது வார்டு பெரியாம்பட்டி மாரியம்மன் கோவில் வரை குடிநீர் பைப் லைன் விஸ்தரிப்பு பணி. | 30000/– | 300 | 336 | 30 நாட்கள் |
| 2 | 6வது வார்டு ஜலகண்டாபுரம் மெயின் ரோடு ஆசிரியர் காலனி அருகில் விநாயகர் கோவில் வரை சிறுபாலத்திற்கு மூடி அமைத்தல். | 30000/– | 300 | 336 | 30 நாட்கள் |
| 3 | 7வது வார்டு பத்ரகாளியம்மன் கோவில் அருகில் பைப் லைன் மற்றும் மழைநீர் வடிகால் வாய்க்கால் அமைத்தல். | 150000/– | 1500 | 336 | 45 நாட்கள் |
| 4 | 9வது வார்டு பொதுகழிப்பிடம் முதல் ஓமலூர் மெயின் ரோடு வரை பைப் லைன் மூலம் மழைநீர் வடிகால் அமைத்தல். | 97000/– | 970 | 336 | 30 நாட்கள் |
| 5 | 10வது வார்டு ஜங்ஷன் மெயின் ரோடு மாதேச முதலி தெரு வரை மழைநீர் வடிகாலுக்கு மூடி அமைத்தல். | 22000/– | 220 | 336 | 30 நாட்கள் |
| 6 | 10வது வார்டு ஜங்ஷன் மெயின் ரோடு புகையிலைக்காரன் தெரு பகுதியில் மழைநீர் வடிகால் பராமரித்தல். | 16000/– | 160 | 336 | 30 நாட்கள் |
| 7 | 11வது வார்டு பண்டார இடும்ப முதலி சந்து பகுதியில் மழைநீர் வடிகால் புனரமைப்பு பணி. | 100000/– | 1000 | 336 | 45 நாட்கள் |
| 8 | 12வது வார்டு அருணாசலகுருக்கள் தெரு பகுதியில் மழைநீர் வடிகால் பராமரித்தல். | 60000/– | 600 | 336 | 30 நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | 12வது வார்டு அருணாசலகுருக்கள் தெரு பகுதியில் பைப் லைன் வீடு வரை பைப் லைன் அமைத்தல். | 40000/– | 400 | 336 | 30 நாட்கள் |
| 10 | 14வது வார்டு வேலாயுதசாமி கோவில் அருகில் மழைநீர் வடிகால் மற்றும் கல்வெர்ட் மூடி அமைத்தல் பணி. | 250000/– | 2500 | 840 | 45 நாட்கள் |
| 11 | 16வது வார்டு மோட்டுப்பட்டி ரோடு பெருமாள் கோவில் வீதியில் பைப் லைன் மற்றும் டேங்க் அமைத்தல். | 65000/– | 650 | 336 | 30 நாட்கள் |
| 12 | 16வது வார்டு மோட்டுப்பட்டி ரோடு கவுன்சிலர் வீடு பெருமாள் கோவில் வரை பைப் லைன் விஸ்தரிப்பு பணி . | 85000/– | 850 | 336 | 30 நாட்கள் |
| 13 | 20வது வார்டு சமுதாய கூடம் பின்புறம் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றுக்கு மின்மோட்டார் அமைப்பதற்கு குட்டு கட்டும் பணி | 40000/– | 400 | 336 | 30 நாட்கள் |
| 14 | 21வது வார்டு சரவணகுப்புசாமி முதலி தெரு மழைநீர் வடிகால் புனரமைப்பு | 50000/– | 500 | 336 | 30 நாட்கள் |
| 15 | 22வது வார்டு சொசைட்டி கட்டிடம் முதல் கவுன்சிலர் வீடு வரை பைப் லைன் விஸ்தரிப்பு | 80000/– | 800 | 336 | 30 நாட்கள் |
| 16 | 25வது வார்டு மேல் சின்னா கவுண்டம்பட்டி பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் மற்றும் பைப் லைன் விஸ்தரிப்பு பணி. | 40000/– | 400 | 336 | 30 நாட்கள் |
| 17 | 27வது வார்டு கட்டைய முத்து முதலி தெரு பகுதியில் மழைநீர் வடிகாலுக்கு மூடி அமைத்தல். | 52000/– | 520 | 336 | 30 நாட்கள் |
| 18 | 27வது வார்டு காட்டு மேல் வண்ணார தெரு பகுதியில் மழைநீர் வடிகாலுக்கு மூடி அமைத்தல். | 80000/– | 800 | 336 | 30 நாட்கள் |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.586/2022/அ1)
2. மேற்கண்ட செலவுத்தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.204 (29)**

75வது ஆண்டு சுதந்திர தினத்தினை சிறப்பிக்கும் பொருட்டு 13.08.2022 முதல் 15.08.2022ஆம் தேதி வரை அனைத்து வீடுகளிலும் கொடிகள் பறக்கவிட தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, தாரமங்கலம் நகராட்சிக்கு 1 முதல் 27 வார்டுகளிலும் அனைத்து வீடுகளிலும் கொடிகள் பறக்கவிட, 5000 தேசிய கொடிகள் வாங்கியமைக்கு, ஒரு கொடிக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ.21 ரூபாய் வீதம் 5000 தேசிய கொடிகளுக்கு ரூ.1,05,000/– ரம்யா டெக்ஸ்டைல்ஸ், விருதுநகர் நிறுவனத்திற்கு நகராட்சியின் பொதுநிதியில் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.505/2022/அ1)
2. மேற்கண்ட செலவுத்தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.205 (30)**

தாரமங்கலம் நகராட்சி 6வது வார்டு சந்தைபேட்டை பகுதியில் சர்வே எண்.182/2–ல் புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கும் மற்றும் 20 வார்டு கிழக்குபாவடி தெரு பகுதியில் சர்வே எண்.159/7–ல் புதியதாக நுண் உயிர் உர மையம் கட்டுவதற்கும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது உடன் பணியினை தொடங்க பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் பகுதிகளில் இடையூறாக 3 மின் கம்பங்கள் உள்ளது. மேற்காணும் பணிகளை உடன் தொடங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளதால், 3 மின் கம்பங்களையும் மாற்றி அமைக்க மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினை தாரமங்கலம் மின்வாரியத்திலிருந்து கேட்பு கிடைக்கப்பெற்றதும், நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.07/2022/அ1)

**தீர்மான எண்.206 (31)**

தாரமங்கலம் நகராட்சி அலுவலக கட்டிடம் அருகில் உள்ள ஓட்டுவில்லை கட்டிடம் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு தற்போது பழுதான மற்றும் பயனற்ற நிலையில் உள்ளதால் அக்கட்டிடத்தின் தரம் குறித்தும், 6வது வார்டு சந்தைபேட்டையில் அமைந்துள்ள 12 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஆடு அடிக்கும் தொட்டி கட்டிடத்தின் சுவர் இடிந்து கீழே விழும் நிலையில் விரிசலுடன் உள்ளதால், மேற்படி ஆடு அடிக்கும் தொட்டி கட்டிடத்தின் தரம் குறித்தும் மற்றும் 13வது வார்டு நல்லகிணறு பொதுக்கழிப்பிடத்தின் தரம் குறித்தும் சான்று வழங்க முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, தர்மபுரி–636704 அவர்களுக்கு பாரத மாநில வங்கி தாரமங்கலம் வரைவோலை எண்.781685 நாள்.18.08.2022–ன்படி ரூ.24780/– நகராட்சியின் பொது நிதியில் செலுத்தியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.07/2022/அ1)

**தீர்மான எண்.207 (32)**

திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2.0** (SBM 2.0) திட்டத்தின் கீழ் தாரமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1வது வார்டு நரிக்குறவர் காலனி பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல், **3**வது வார்டு பாரக்கல்லூர் பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் மற்றும் **13**வது வார்டு நல்லகிணறு தெரு பகுதியில் சமுதாய கழிப்பிடம் ஆகிய பணிகளுக்கு மண் பரிசோதனை (Soil test) செய்து ஆய்வு அறிக்கை அனுப்பி வைக்கும் பொருட்டு முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, தருமபுரி அவர்களுக்கு வரைவோலை எண்.**781678** நாள்.**16.08.2022** ரூ.**24780/–**ஐ நகராட்சியின் பொது நிதியில் செலுத்தியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.357/2022/அ1)

**தீர்மான எண்.208 (33)**

நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**24470/2022**/MA நாள்.**08.08.2022**ஆம் தேதியில் வரப்பெற்றுள்ள கடிதத்தில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு **24–**B-24-H **–**ன் படி வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குவதற்கு மற்றும் அதன் செயல்பாடு விதிகள் குறித்து அரசாணை (நிலை) எண்.**92** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.**24.06.2022** மற்றும் அரசாணை (நிலை) எண்.**93** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.**24.06.2022–**ல் வெளியிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.176 (1) முதல் 192 (17) மற்றும் 195 (20) முதல் 208 (33 ) வரை, நாள்.30.08.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண் .193 (18) மற்றும் 194 (19) , நாள்.30.08.2022.**

நிராகரிக்கப்பட்டது.

**(ஒம்) திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகர் மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**